## 5. எழுத்து செயல்திறனை மதிப்பிட கவனிக்கவேண்டிய முக்கிய விடயங்கள்

- **கணிப்பீட்டில் முக்கிய விடயம்**

மாணவர்களின் எழுத்து உற்பத்திகளைக் கணிப்பீடு செய்வது மாத்திரம் ஆசிரியருடைய தொழிலாக அமையக்கூடாது. ஒரு தொடர்பாடல் எழுத்து எண்ணக்கரு இலக்குக் குழுவினை (3.அ மேலே பார்க்கவும்) உட்படுத்துவதுடன் ஏனைய படிப்பவர்களின் பின்னூட்டல் இன்றியமையாததும் பயனுடையதும் எனக் கருதப்படுகிறது, இதனால் அது எழுத்துச் செயற்பாட்டின்போது ஏற்கெனவே நடைமுறைப் படுத்தப்பட்டதாயிருக்க வேண்டும். இவ்வேளை மாணவர்களுக்கு ஏற்கெனவே தம்முடைய ஒழுங்கான வகுப்பறைப் பாடங்களிலிருந்து நன்கறிமுகமான எழுத்து மாநாடுகளும் பயனுடையன (இயல் 11.1 பார்க்கவும்). ஆசிரியர் முதல் நிலையில் நிறைவுத் திருத்தப்பொறுப்பாளர் பங்கினை நிறைவுசெய்வதுடன் அவர் மேலும் முன்னேற்றத்துக்கான ஆக்கநிலை விமரிசனத்தை முன்வைப்பவராகவும் முன்வைக்க வேண்டியவராகவும் திகழ்வார்.

- **கட்டுரையில் இடம்பெறும் விடயங்கள்**

மரபுவழி கட்டுரை திருத்தும் முறையிலுள்ள பெருஞ்சிக்கல்களுள் ஒன்று பெரிய அளவில் அகநிலை மற்றும் வெளிப்படையின்மை ஆகும். இத்தகைய இடர்பாட்டை தவிர்ப்பதற்குக் குறைந்த அளவு பெரிய ஒப்படைகளுக்கு முன்னராவது தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படவேண்டும். குறைந்தளவாக 4-5 எதிர்பாக்கப்படும் விடயங்கள் மாணவர்களுக்கு கூறப்படவேண்டும். (எ.கா. குறைந்தளவு ஒரு பக்கம் எழுதப்பட வேண்டும். முன்னுரையில் தெளிவான உள்ளடக்கம் முக்கிய பகுதியில் நான்கு முக்கிய தகவல்கள், முடிவுரை போன்றவை உள்ளடக்கப்படவேண்டும்.) புள்ளிகளை வழங்கிய பின் ஒப்படை தொடர்பாக மாணவர்களுடன் குறை நிறையை உரையாடி ஊக்குவித்தல் வேண்டும்.

- **ஊக்குவிக்கும்படி திருத்துதலும் மதிப்பிடுதலும்**

"என்ன பிழை, என்ன விடுபட்டது?" என்பதனை "என்ன இருக்கிறது, எதனை மேலும் சேர்த்துப் பெருப்பிக்கலாம்?" என்னும் வினாவால் மேலும் வழிநடத்தப்படுவது தொடர்பாக ஆசிரியரின் குவிநிலைப்பார்வை பற்றாக்குறையற்றது என்பதை இது குறிக்கிறது. தொடர்படிநிலையாக, ஆசிரியர் வலுவான முறையில் எவ்வாறு மிக நன்றாகத் திட்டமிட்டு முன்னேற்றங்களை (இலக்குப் பயிற்சிகள், ஆழமான உருக்காட்டல், தன் பயன்பாடும் நடைமுறைப்படுத்தலும்) அடையலாம் என்பதை மனங்கொள்வார். நீண்டகால வெற்றிக்கும் பாரம்பரியமொழி கற்பித்தற் பயன்பாட்டுக்கும் இட்டுச்செல்லக்கூடிய நெறிமுறை இது ஒன்றேயாகும்.

- **செய்முறைகளை மதிப்பிடல்**

மரபடிப்படையில், நிறைவடைந்த எழுத்துருவே மதிப்பிடப்பட்டது. எனினும், குறிப்பாக வலுக்குறைவான எழுத்தாளர்கள் எங்கு இடர்களை பட்டறிந்துகொண்டனர் என்பதை இந்நெறிமுறை எப்பொழுதுமே காட்டுதற்குத் தவறுகிறது. இது முன்னைய எழுத்துச் செய்முறையினை அண்மித்து நோக்குதலை வேண்டிநிற்கிறது. எடுத்துக்காட்டாக, ஓர் எழுத்து மதிநுட்பம் பயிற்சியிலிருந்ததெனில், ஒருவர் வெறுமனே எழுதத் தொடங்குகிறார் அல்லது குறிப்பிட்ட மதிநுட்பத்தினைப் பின்பற்றுதற்கு உண்மையான முயற்சி மேற்கொள்கிறார் என்பது தெளிவாகும்.

- **பின்னூட்டல் வழங்கல்**

இன்றைய நெறிமுறை அளவைகளின்படி, ஒரு திருத்தப்பட்ட மற்றும் தரப்படுத்தப்பட்ட எழுத்துப் பகுதியை வெறுமனே திருப்பிக்கொடுத்தல் இனிமேலும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. ஊக்குவிப்பு நோக்குநிலைப்பட்ட கற்பித்தலென்பது மாணவர்களுக்கு அவர்களுடைய எழுத்துகள் பற்றிய உருப்படியான எழுத்து அல்லது தாய்மொழி ஊடான கருத்துரைகளுடன், அவர்களுடைய வேலையின் மேலதிக மேம்பாட்டையும் முன்னேற்றத்தையும் நோக்கிய குறிப்பான மதியுரைகளையும் வழிகாட்டலையும் வழங்குதலாகும்.

- **தகைமை நோக்குதல்**

வரையறை செய்யப்பட்ட தகைமைகளை (குறைவுள்ள, இயல்பான, அல்லது விரிவாக்கப்பட்ட தகைமைகள் என பெரும்பாலும் வேறுபடுத்தப்படும்) நோக்கிய நோக்குநிலையே கல்விக் கருத்தாடலில் இன்றைய தலைப்பு ஆகும். பாரம்பரியமொழிகளைக் கற்பித்தலில் ஓர் பரந்த நிலையிலே இது எண்ணப்பட வேண்டியதாகும். மொழியியல் அடிப்படையில், இது Common European Framework, cf. http//www.goethe.de/z/50/commeuro/303.htm ஐ உசாத்துணையாக உள்ளடக்கவேண்டும்.

இந்த அறிமுகப் பகுதிக்கு அவர்களுடைய மதிப்பார்ந்த பங்களிப்புகளுக்காக, கிளவுடியா நியுகெபவர், கிளவுடியோ நொடரி, ஸ்ரீபன் மச்லர் மற்றும் பீற்றர் சீபர் ஆகியோருக்கு நான் நன்றி கூறுகிறேன்.